O.S. No.2/2009

22.01.2019

**வாசா.1 திருப்பதி என்பவர் ஆஜராகி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**3ம் பிரதிவாதி தரப்பு கு.வி**

1ம் வாதி முதல் வகுப்பிலிருந்து 12ம் வகுப்பு வரை ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள லயன்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் படித்தார். நான் எல்கேஜியிலிருந்து 12ம் வகுப்பு வரை ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள லயன்ஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் படித்தேன். நானும் 1ம் வாதியும் படித்த பள்ளி ஆங்கிலவழி பள்ளி. கட்டணம் செலுத்தி தான் அந்த பள்ளியில் நாங்கள் இருவரும் படித்தோம். அந்த பள்ளியில் எங்கள் இருவரையும் சேர்த்து படிக்க வைத்தது என்னுடைய தந்தை. ஸ்ரீவில்லிபுத்தூரில் 100 ஆண்டு கொண்டாடிய கிண்டே பள்ளியும், சிஎம்எஸ் போன்ற தமிழ்வழி பள்ளிகள் உண்டா என்றால் உண்டு. ஆனால் அந்த பள்ளிகள் 100 ஆண்டுகள் பள்ளியா என்பது தெரியவில்லை. அந்த பள்ளியில் எங்கள் பள்ளியை போன்று கட்டணம் எதுவுமில்லை. தாவா வழக்கிற்கு வழக்கறிஞருக்கு நான் தான் விபரம் சொன்னேன். நான் பிறந்த தேதி 04.09.1987. 1ம் வாதி சிவகாசி மெப்போ இன்ஜினியரிங் கல்லூரியில் படித்தார். நானும் அந்த கல்லூரியில் பிஇ படித்தேன். எங்கள் இருவரையும் அந்த கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்தது என் அப்பா. மெப்கோ இன் ஜினியரிங் கல்லூரி டாப் ரேங்கில் மாநில அளவில் 10இடங்களில் அதுவும் ஒன்று. நாங்கள் இருவரும் உறாஸ்டலில் தங்கி தான் படித்தோம். 1ம் வாதி பிஇ முடித்தவுடன் சென்னையில் வெளியே தங்கி எம்.இ படித்தார். 1ம் வாதியும் நானும் படிப்பிற்காக ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் கடன் வாங்கி படித்தோம். அந்த வங்கியில் கடன் வாங்குவதற்கு என் அப்பா உடன் இருந்து கையெழுத்து போட்டு வாங்கிக்கொடுத்தார். நாங்கள் வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டோம்.

எப்போது கட்டிமுடித்தோம் என்று ஞாபகமில்லை. நானும் 1ம் வாதி, என் அப்பா, என் அம்மா நால்வரும் ஒரே கூட்டுக்குடும்பமாக தான் இருந்து வருகிறோம். கூட்டுக்குடும்பத்திற்கு என் தகப்பனார் தான் கர்த்தாவாகவும் தலைவராகவும் இருந்தார். என் சகோதரர் பிறந்த தேதி 16.09.1984 என நினைக்கிறேன். எனக்கும் 1ம் வாதிக்கும் எந்த வயதிலிருந்து எங்கள் குடும்ப நிலவரம் தெரியவரும் என்றால் சொல்லமுடியாது. வழக்கிற்கு பிறகு தான் குடும்ப நிலவரம் தெரியவருகிறது என்றால் சரிதான். தாவா சொத்து விபரம் பற்றி என் அப்பாவிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். அவர் தான் சொன்னார். நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர நகல் எதுவும் எடுத்துக்கொள்ளவில்லை. வாசாஆ1ஐ என் அப்பா என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். எந்த நிலத்தில் என்ன பயிர் சாகுபடி செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பொதுவாக நெல், கரும்பு சாகுபடி செய்வார்கள். குறிப்பாக எங்கள் நிலத்தில் என்ன சாகுபடி செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஸ்ரீவில்லிபுத்தூர் ஒரு மழைமறைவு பகுதி என்று எனக்கு தெரியாது. கம்மாய்கள் 10, 15 வருடங்களுக்கு ஒரு முறை நிறையும் என்றால் என்னால் சரியாக சொல்லமுடியாது. கடைசியாக கம்மாய்கள் நிறைந்து 10, 15 வருடங்கள் இருக்கும் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எந்த வருடம் நிறைந்தது என்று எனக்கு தெரியாது. கம்மாய்கள் நிறைவதை வைத்து தான் கிணற்றில் நீர் ஊற்று இருக்கும் என்றால் எங்கள் கிணற்றில் ஒரு நாளைக்கு 2லிருந்து 4 மணி நேரம் வரை தண்ணீர் வர வாய்ப்புள்ளது. என் தகப்பனாருக்கு எந்த கெட்ட பழக்கவழக்கங்களும் கிடையாது. என் தகப்பனார் ஆடம்பர செலவுகள் எதுவும் செய்தது கிடையாது. என் தகப்பனார் எங்களுடன் ஒரே குடும்பமாக இருந்து விவசாயம் செய்து வந்தார் என்றால் சரிதான். வேறு என்ன தொழில் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. போதிய மழை இல்லாமை, தண்ணீர்பற்றாக்குறை, விளைச்சல்குறைவு, கட்டுப்படி இல்லாவிலைகுறைவு ஆகியவற்றால் விவசாயத்தில் நஉ்டம் வரும் என்றால்

சரியல்ல. எங்கள் நிலத்தில் வருடாவருடம் விளைச்சல் இல்லை என்று சொன்னால் அதை என்னால் உறுதியாக சொல்லமுடியாது. தாவா சொத்திற்கு சாகுபடி அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிராதிலும், நிரூபன வாக்குமூலத்திலும் விவசாயத்தில் செலவு போக உபரி வருமானம் கிடைத்தது என்று சொல்லக்கிடையாது என்றால் சரிதான். விவசாய கணக்கு உண்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா காலத்திலிருந்து எங்கள் குடும்பங்களில் விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான். என் அப்பா, பெரியப்பா, அத்தைமார்கள் ஆகியோர்கள் சொத்தை பகிர்ந்து கொண்ட காலத்தில் பணமாக வைத்துவிட்டு சென்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் பணமாக வைத்துசெல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா காலத்திலிருந்து எங்கள் குடும்பத்திற்கு கடன் தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ1ல் என் அப்பா, பெரியப்பா, சித்தப்பா ஆகியோர்கள் தான் 1, 2, 3 நபர்கள் என்றால் சரிதான். வாசாஆ1ல் பக்கம் 11ல் தன் தகப்பனாரால் வாங்கப்பட்டிருந்த வங்கிக்கடனை 1, 2, 3 நபர்கள் சரிசமமாக செலுத்தி கடனை தீர்த்துவிட வேண்டியது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ1ல் எங்கள் குடும்பத்திற்கு ரொக்கமாக பணமோ, வேறு வெளிநபர்களிலிடமிருந்து வரவேண்டியதாக தொகைகளோ காட்டப்படவில்லை என்றால் சரிதான். என் அப்பா சீட்டு தொழில் நடத்திவந்ததாக பிராதிலும், நிரூபன வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் இவ்வழக்கிற்கு பின் தான் தெரியவந்தது. எந்த வருடத்திலிருந்து நடத்தி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சீட்டு தொழில் எந்த வருடம் வரை நடத்தி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு நடத்தி வந்த சீட்டு தொழிலில் லாபமா நஷ்டமா என்றால் நஷ்டம் வந்தது. எந்த வருடத்தில் எவ்வளவு நஷ்டம் என்றால் என் அப்பா நடத்தி வந்த சீட்டு தொழில் கணக்கு வழக்கை நான் பார்க்கவில்லை. எந்த வருடத்தில்

எவ்வளவு நஷ்டம் என்று என்னால் சொல்லமுடியாது. என் தகப்பனார் சொன்னதை வைத்து நஷ்டம் ஏற்பட்டதாக சொன்னேன். மேற்படி விபரத்தை என் அப்பா இந்த வழக்கிற்கு பின்னர் சொன்னார்.